## கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

### மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான முக்கிய அறிவித்தல் - க.பொ.த (உயர் தரம்) மாணவர்களுக்கான அரசாங்கத்தின் புலமைப்பரிசில் திட்டம்

**"வளமான நாடு - அழகான வாழ்க்கை"** எனும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்திற்கு மற்றும் 2025 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கமைய இலங்கை அரசாங்கத்தினால் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் சிறப்பான வகையில் சித்தியடைந்துள்ள 200 மாணவர்களுக்கு **சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர் தரப்படுத்தலின் கீழான வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஆரம்பப் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு** புலமைப்பரிசில் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் **கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் செயல்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. க.பொ.த. (உயர் தரம்) - 2025** பரீட்சையில் சிறப்பான வகையில் சித்தியடைந்துள்ள மாணவர்களிடமிருந்து இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த அரசாங்க புலமைப்பரிசில் திட்டத்தில் தங்களுக்குத் தொடர்பு இருப்பதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்து **சில அங்கீகரிக்கப்படாத தனியார் முகவர்களும் நிறுவனங்களும்** மாணவர்களையும் பெற்றோர்களையும் தவறாக வழிநடாத்துவதனை அமைச்சினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

**இந்த அறிவித்தல் மூலம் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருவதாவது:**

- அமைச்சுக்கு எந்தவொரு தனியார் நிறுவனம், ஆலோசனை நிறுவனம் அல்லது முகவருடன் **எந்தவிதமான கூட்டாண்மையோ, ஒப்பந்தமோ அல்லது தொடர்போ இல்லை.**
- அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தவோ, விண்ணப்பங்களைத் தயாரிக்கவோ, விண்ணப்பதாரிளைப் பரிந்துரைக்கவோ அல்லது தெரிவு தொடர்பாக செல்வாக்கு செலுத்தவோ **எந்தவொரு தனியார் தரப்பினருக்கும் அதிகாரம் இல்லை.**
- **வெளிப்படையான, போட்டித்தன்மை வாய்ந்த, திறமை** அடிப்படையிலான செயல்முறையின் மூலம் விண்ணப்பங்கள் **அமைச்சினால் நேரடியாகப் பெறப்பட்டு** மதிப்பீடு செய்யப்படுகின்றன.
- விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரிகளுக்கு **எந்தவொரு முகவர் அல்லது இடைத்தரகரின் சேவைகளும் தேவையில்லை.**
- அனுமதிக்கப்படாத மூன்றாம் தரப்பினருடனான தொடர்புகளால் ஏற்படும் விளைவுகளுக்கு **அமைச்சு எந்தப் பொறுப்பையும் ஏற்காது.**

மாணவர்களும் பெற்றோர்களும் அமைச்சின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை மாத்திரமே நம்புமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அரசாங்கத்தின் இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தை தவறாக சித்தரிக்கும் அல்லது பொதுமக்களைத் தவறாக வழிநடத்தும் எந்தவொரு தனிநபர் அல்லது நிறுவனமும் இலங்கை சட்டங்களின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும்.

**செயலாளர்**
**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**2026 மே மாதம் 06 ஆம் திகதி**